மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 5

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**மார்ச் 2010**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

## TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2010 மார்ச்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**(கர்த்தர்) உமது**

**ஆலோசனைகளையெல்லாம்**

**நிறைவேற்றுவாராக.**

சங்கீதம் 20 : 4



கர்த்தருடைய கிருபையினால்
திண்டுக்கல் – **வடமதுரையில்**
கட்டப்பட்டு வரும் ஜெபவீடு.
2010 மார்ச் மாதத்தில்
பிரதிஷ்டை செய்ய
வாஞ்சிக்கிறோம்.
ஜெபியுங்கள்.

**நன்றி :**

***Yishun Evangelical Church Singapore.***

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**CHIEF EXECUTIVE OFFICER Letter Dated:10.02.2010**



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் **'100–கிராமஊழியம்'** காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் யூனியனில் நடைபெற்றது. மொத்தம் 11,980 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன.

திருச்சியிலும், கும்பக்கோணம் மற்றும் புதுக்கோட்டையிலும் TVGM தரிசனமுகாம்கள் திட்டமிட்டபடியே வெற்றியாக முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

ஒரிஸாவில் 2 ஜெபவீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 2010 ஏப்ரல் மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் 2010 மார்ச் 16,18,19 ஆகிய தேதிகளில் **திருவலங்காடு, பெருவளப்பூர், வடமதுரை** ஆகிய மூன்று கிராமங்களிலும் ஜெப வீடு பிரதிஷ்டை நடைபெற உள்ளன. ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மேலும் இந்தப் பத்திரிக்கை உங்கள் கரங்களில் கிடைக்கும்பொழுது, TVGM தலைமை அலுவலக காம்பவுண்டில் அமைந்துள்ள ஆலயத்தின் 3வது ஆண்டு நிறைவுவிழா (2010 பிப்ரவரி 20) முடிந்திருக்கும். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** நிலத்திற்கான முழுத் தொகையை இம்மாத இறுதிக்குள் கொடுக்க வேண்டும். ஒரு பிளாட்டுக்கு ரூ.10,000/- வீதம் கொடுக்கக் கூடிய 135 கர்த்தருடைய பிள்ளைகளை தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள். நிலத்திற்கு முன் தொகையாக ரூ. 1,50,000/- கொடுக்க உதவி செய்த தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

தங்களுக்காக ஜெபிக்கிறோம். தாங்களும் தொடர்ந்து எங்களுக்காக, TVGM ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

# ( கர்த்தர் ) உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக. சங்கீதம் 20:4

வாக்குத்தத்த செய்தி

மார்ச் மாதம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே!

**கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் :**

**சங்கீதம் 20:4**

**உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக.**

ஆம்! கர்த்தர் இம்மாதம் உங்கள் ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்ற விரும்புகிறார். அநேக முறை நமது ஆலோசனைகள் நிறைவேறாமல் போவதற்கு நாமே காரணமாக இருக்கிறோம். நமது சுய வழிகளின்படி ஆலோசனைகளை செயல்படுத்துவோமானால், அந்த ஆலோசனைகள் சிதைந்து போகவும், நம்முடைய விருப்பங்கள் நிறைவேறாமல் போகவும் ஏதுவாகும் என்பதை **யோபு 17:11** ல் நாம் வாசிக்கலாம்.

'என் நாட்கள் போயிற்று; என் இருதயத்தில் எனக்கு உண்டாயிருந்த சிந்தனைகள் அற்றுப் போயிற்று'.

யோபு கூறுவதுபோல் நம்முடைய ஆலோசனைகள் சிதறிப் போகவும், விருப்பங்கள் நிறைவேறாமல் போகவும் வாய்ப்புண்டு.

யோபு தேவனுடைய நன்மைகளை தனது வாழ்க்கையில் அனுபவித்த பிறகு இப்படியாக கூறுகிறார்: **யோபு 42:2** ல்

'தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்'.

தேவன் தமது ஆலோசனைகள் நமது வாழ்க்கையில் நிறைவேற வேண்டுமென்று விரும்புகிறார். ஏனென்றால் அவரால் ஆகாததது ஒன்றுமில்லை.

**பக்தன் பாடுகிறார்:-**

***கர்த்தர் செய்ய நினைத்தது***
***தடைபடவில்லை***
***சகலத்தையும் நன்மையாக***
***செய்துமுடித்தார்.***

நீங்களும் இந்த மாதத்தில் அடிக்கடி இதை பாடிக்கொண்டேயிருங்கள்.

அநேக நேரங்களில் நமது எதிரிகள் நமக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, கீழே தள்ளும்படியான தருணங்களை எதிர்பார்த்து இருப்பார்கள். இதை **யோபு 23:14**ல் கூறுகிறார்:

'எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்; இப்படிப்பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு'.

எதிரிகள் நமக்கெதிராக அநேக ஆலோசனைகள் வகுத்தாலும், அவைகள் நடந்தேறாது.ஆகவே தைரியமாயிருங்கள். **சங்கீதம் 33:10,11** ல் தாவீது கூறுகிறார்:

'ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்'.

'கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்'.

கர்த்தருடைய ஆலோசனைகளை அவமாக்க முடியாது. தேவன் ஒருவரே நம்முடைய வாழ்க்கையை குறித்து திட்டமிடுகிறவர். அவர் நமது வாழ்க்கையை திட்டமிடுவாரானால் ஒருவரும் அதை அவமாக்க முடியாது.

**சங்கீதம் 40:5** 'நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்முடைய அதிசயங்களும், உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லி முடியாது'.

ஆகையால், நாம் அவருடைய ஆலோசனைப்படி திட்டமிட மனதுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

மேலும், அவருடைய ஆலோசனைப்படி திட்டமிடுவோமானால், அவர் நமக்கு ஏற்ற சரியான திட்டம் எதுவென்று அறிந்து கொள்ள உதவி செய்வார்.

**நீதிமொழிகள் 19:21** ல் 'மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்'.

நாம் தேவனுடைய திட்டத்தை அறிந்துகொள்ளும்போது ஒருவரும் அதை அவமாக்க முடியாது. நாம் தேவனோடு இணைந்து திட்டமிடுவோமானால் ஒருவரும் அதை தடைபண்ணவும் முடியாது.

**நீதிமொழிகள் 21:30** ல் 'கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை'.

நமது தேவன் நம் எதிரிகளின் ஆலோசனைகளை ஒன்றுமில்லாமல் ஆக்க வல்லவராயிருக்கிறார்.

**ஏசாயா 19:3**ல் கர்த்தர் சொல்லுகிறார்:

'எகிப்தியருடைய ஆவி
அவர்களுக்குள் சோர்ந்துபோகும்;
அவர்கள் ஆலோசனையை முழுகிப்
போகப் பண்ணுவேன்'.

ஒருவேளை நீங்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் எதிரிகளின் திட்டத்தை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட வல்லவராயிருக்கிறார், அது நமது கண்களுக்குப் பெரிதாக தோன்றினாலும், கர்த்தர் நமக்காக திட்டங்களை வகுக்கும்போது **ஏசாயா 23:9**ல் கூறுகிறபடி **பூமியின் கனவான்கள் யாவரையும் கனஈனப்படுத்துவார்.** இது கர்த்தரின் திட்டமாயிருக்கிறது.

நமது தேவன் நாம் போடும் திட்டத்தை விட ஞானமுள்ளதும், மேலானதுமான திட்டம் ஒன்றை எப்போதும் வைத்திருக்கிறார். ஒரு நம்பிக்கையையும் ஒரு எதிர்காலத்தையும் தரக்கூடிய, நம் வாழ்க்கையை வளமாக்கக்கூடிய ஒரு திட்டம் தான் அது.

**எரேமியா 29:11** 'நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே'.

மேலும் தேவன் நமக்காக திட்டம் வகுக்கும்போது, எதிரிகள் நமது கர்த்தரின் திட்டங்களை அறிய முடியாது. **மீகா 4:12**ல் இதை நாம் வாசிக்கலாம்.

'ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய
நினைவுகளை அறியாமலும்,
அவருடைய யோசனையை
உணராமலும் இருக்கிறார்கள்'.

ஒருவேளை உங்கள் எதிரிகள் அடிக்கடி உங்கள் வார்த்தையிலும், செய்கைகளிலும் குற்றம் கண்டு பிடித்து கீழே தள்ள முயன்று கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கலாம். ஆனால் இயேசு இந்த உலகத்தில் இருக்கும்போது பரிசேயர்கள் அவரை அவர் வார்த்தைகளில் சிக்க வைக்க திட்டம் போட்டார்கள் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். இதை **மத்தேயு 22:15**ல் வாசிக்கிறோம்.

'அப்பொழுது, பரிசேயர் போய் பேச்சிலே
அவரை அகப்படுத்தும்படி யோசனை
பண்ணினார்கள்'.

இப்படிப்பட்ட வேளைகளில் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் நமக்கு தேவை.

கடைசியாக, சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நமக்கென்று திட்டமிடும்போது, நமது எதிரிகளுக்கு பயத்தை வருவிக்கிறது. **ஏசாயா 19:17**ல் பார்க்கிறபடி 'சேனைகளின் கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக நிர்ணயித்துக் கொண்ட ஆலோசனையினிமித்தம் யூதாவின் தேசம் எகிப்தியருக்கு பயங்கரமாயிருக்கும்'.

**நமது திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டிய ஐந்து காரியங்கள் உண்டு.**

**1. நன்மையானதை திட்டமிட வேண்டும்.**

**2. தெய்வீக ரீதியில் திட்டமிட வேண்டும்.**

**3. நமது திட்டங்களை தேவனிடத்தில் ஒப்படைக்க வேண்டும்.**

**4. நமக்கென்று தேவன் வைத்திருக்கும் திட்டம் என்னவென்று அவரிடத்தில் கேட்க வேண்டும்.**

**5. கர்த்தருடைய பாதுகாப்பை நாட வேண்டும்.**

**முதலாவதாக:** தேவனுடைய பார்வையில் எது நன்மையாக இருக்கிறதோ அதையே நாம் திட்டமிடும்படி நம்மை எதிர்பார்க்கிறார்.

**நீதிமொழிகள் 14:22** 'நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு'.

ஆம்! நாம் நன்மையானதை மட்டும் திட்டமிடுவோமானால் தேவனின் கிருபையையும் சத்தியத்தையும் நாம் செய்யும் காரியத்தில் காண முடியும்.

**இரண்டாவதாக:** தெய்வீக ரீதியில் திட்டமிட்டு உலக ரீதியை தவிர்க்க வேண்டும்.

**2கொரி.1:17** 'இப்படி நான் யோசித்தது வீணாக யோசித்தேனோ? அல்லது ஆம் ஆம் என்கிறதும், அல்ல அல்ல என்கிறதும் என்னிடத்திலே இருக்கத்தக்கதாக நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ?'.

**மூன்றாவதாக:** நமது திட்டங்களை தேவ கரத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**நீதிமொழிகள் 16:3** 'உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்'.

**நான்காவதாக:** கர்த்தர் தமது திட்டத்தை அவருடைய ஊழியக்காரர்கள் மூலம் நமக்கு வெளிப்படுத்த எப்போதும் சித்தம் உள்ளவராயிருக்கிறார்.

**ஆமோஸ் 3:7** 'கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்கு தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்'.

நிச்சயமாக, உன்னதமான கர்த்தர் தம்முடைய திட்டத்தை தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தாமல் ஒன்றையும் செய்ய மாட்டார்.

**ஐந்தாவதாக:** அநேக நேரங்களில் நமது எதிரிகளின் திட்டங்கள் நமது கண்களுக்கு குற்றமற்றதாக காணப்பட்டு கலங்கச் செய்யும். ஆனால் நாம் செய்ய வேண்டியது, கர்த்தரிடத்தில் அவருடைய பாதுகாப்பை பெற்றுக்கொள்ள மன்றாட வேண்டும்.

**சங்கீதம் 140:4**ல் தாவீது கூறுகிறார்: 'கர்த்தாவே துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்; அவர்கள் என் நடைகளை கவிழ்க்கப் பார்க்கிறார்கள்'.

இந்த ஐந்து காரியங்களையும் செய்வோமானால் தேவன் நமது திட்டங்களை நிறைவேறச் செய்வார்.

**நாம் நமது வாயினால் இப்படி அறிக்கை செய்வோம்:**

**என் தேவனாகிய கர்த்தாவே!**
**உமது திட்டங்கள் என் திட்டங்கள்.**
**எனது திட்டங்கள் உமது திட்டங்கள்.**
**யார் உமது திட்டங்களுக்கு எதிர்த்து நிற்க கூடும்? உமது திட்டத்தில் நான் ஜெயம் எடுக்கிறேன். எனது திட்டங்களை உமது கரத்தில் ஒப்படைக்கிறேன். ஆமென்!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# ஈரோடு - அம்மாபேட்டை யூனியன் 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2010 மார்ச் 15** திங்கள் காலை 9 மணி முதல் **மார்ச் 19** வெள்ளி இரவு 10 மணி முடிய **ஈரோடு – அம்மாபேட்டை யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2010 மார்ச் 15** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம்** : **2010 மார்ச் 19** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2010 மார்ச் 15 - 19 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**அகில உலகத்திற்கும் சுவிசேஷம் ஜெபவீடு**
**அரியாம்பள்ளம், அந்தியூர் ரோடு,**
BSNL **தொலைபேசி நிலையம் எதிரில்**
**அம்மாபேட்டை - 638 311.**
**பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம்.**
**செல்: 97505 95939**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்** S.**பால் விக்டர்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# காஞ்சிபுரம் - உத்திரமேரூர் யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

**THANKS: The Light House Ministries.NECK - ELC**



கர்த்தருடைய கிருபையால் காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் யூனியனில் 18.01.2010 முதல் 22.01.2010 வரை **"100 கிராம ஊழியம்"** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசி நாள், கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை எடமச்சி **பாஸ்டர். ஜேக்கப் செல்லமுத்து** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ் நாட்டின் 12 மாவட்டங்களைச் சேர்ந்த 48 கிராம ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.



முதல்நாள் ஜெபத்தில் உத்திரமேரூர் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் TVGM காரியதரிசி **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** கலந்து கொண்டு ஊழியர்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி ஜெபித்தார்கள். சென்னையைச் சேர்ந்த **பாஸ்டர் ஸ்டீபன்** அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள்.

இதன்பின்பு, கிராம ஊழியர்களை 11 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்ய போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். எடமச்சி கிராமத்திலுள்ள பெத்தேல் அசெம்பிளி சபை சார்பில் கிராம ஊழியர்களுக்கு மதிய விருந்து அளிக்கப்பட்டது. இதன்பின் 11 குழுவினரும் ஜெபத்துடன் கிராமங்களுக்குள் கடந்து சென்று 5 நாட்கள் கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு, அலைந்து திரிந்து ஊழியம் செய்தார்கள்.





இந்த ஊழியத்தின்போது கிராமங்களில் மொத்தம் 11,980 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 15000 இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள், 5000 இதர கைப்பிரதிகள் மற்றும் 10,000 சிலுவைக்கொடிகள் இலவசமாக வழங்கப்பட்டது.

5 நாட்கள் ஊழியங்களை முடித்து மீண்டும் ஊழியர்கள் யாவரும் முன்பு கூடிய இடத்திலேயே கூடி கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேனை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்டவர்களில் 151 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து, தபால் மூலம் வேதபாடங்களை அனுப்ப கேட்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

### குழு 1: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், ஞானசெல்வி, சலோமி சம்மனசு.

நாங்கள் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகங்கள், கைப்பிரதி, சிலுவைக்கொடி கொடுத்து இயேசுவே மெய்யான தேவன் என்று அறிவித்தோம். பலர் வாஞ்சையுடன் கேட்டார்கள். ஒரு சிலர் புத்தகம் வேண்டாம் என்று சொன்னார்கள். பல வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 2: சகோதரி மரியம்மாள், எஸ்தர்பேபி, கிரேஸ் பத்மா, அன்னாள், அபியேல் அந்தோணியம்மாள்.

நாங்கள் சிறுமயிலூர் கிராமத்தில் வீடுவீடாக சுவிசேஷம் அறிவித்தபோது, ஒரு வீட்டில் ஒரு வாலிப பெண்ணுக்கு சுகமில்லை என்று அவளது தாயார் எங்களை ஜெபிக்கும்படி அழைத்தார்கள். நாங்கள் போய் அந்த பெண்ணுக்காக ஜெபித்தபோது, அவள் தன் கைகளை உயர்த்திப் பின்னி வீடு முழுவதும் உருண்டு பாம்பை போல ஆடினாள். நாங்கள் **30** நிமிடம் வரை விடாது ஜெபித்தபோது, அந்த சர்ப்பத்தின் ஆவி அவளை அலைக்கழித்து தள்ளிவிட்டு போய்விட்டது. அந்தப் பெண் தெளிந்து எழுந்து சுகத்துடன் உட்கார்ந்தாள். இந்தப் பகுதிகளில் அநேக கிராமங்களில் பாம்பை மக்கள் வணங்குகிறார்கள். இப்படிப்பட்ட கட்டுகளிலிருந்து மக்கள் விடுதலையாக ஜெபித்தோம். மொத்தம் 1105 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 3: சகோதரி கஸ்தூரி சுப்பையா, மேரி மீனா, மரியாள், ரூத் பகவதி, அந்தோணிமேரி.

நாங்கள் கோடித்தண்டலம் கிராமத்தை சுற்றியுள்ள கிராமங்களில் வீடுவீடாக புத்தகம் கொடுத்தோம். யாவரும் அன்புடன் வாங்கினார்கள். அரவாணிகள் குடியிருப்பில் சென்றபோது, அவர்கள் எங்களை வரவேற்று உபசரித்து நாங்கள் சொன்ன சுவிசேஷத்தை ஆர்வமாக கேட்டது மிகவும் சந்தோஷமாக இருந்தது. நாங்கள் சந்தித்த எல்லா கிராமங்களிலும் மக்கள் ஆர்வமாக புத்தகங்களை வாங்கி **இயேசுவே மெய்யான கடவுள்** என்று சொன்னதை ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1010 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 4: சகோதரி விமலா, ஜெபமணி, கிருபா பழனியம்மாள், கிளமெண்ட்ஸ்மேரி.

நாங்கள் நற்செய்தி அறிவிக்க சென்ற கிராமங்களில் ஒருவரும் மறுக்கவோ, எதிர்க்கவோ இல்லை. பல நோயாளிகளுக்காக ஜெபித்தோம். விசேஷமாக முழங்கால்வலியால் அசையக்கூட

முடியாமல் படுத்திருந்த ஒரு பெண்ணுக்காக ஜெபித்தோம். மறுநாளே அவள் நடந்து வீட்டு வேலைகளை செய்ய ஆரம்பித்தாள். ஒவ்வொரு நாள் இரவிலும் ஒரு வீட்டில் கூடி ஜெபித்து சுவிசேஷம் அறிவித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி செலின் ஜெயபால், லூயிஸ் அம்மாள், தேவபாக்கியம், ரெபேக்கா, ரூத் கலாவாணி.**

பொற்பந்தல் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் யோவான் புத்தகம் கொடுத்தோம். பல வியாதியஸ்தர்களை சந்தித்து இயேசுவின் நாமத்தில் சுகம் பெற ஜெபித்தோம். மொத்தம் 1955 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி லீதியாள், தேவகிருபை, தெபோராள், செல்லக்கனி.**

நாங்கள் 6 கிராமங்களில் வீடு வீடாக சென்று யோவான் புத்தகம் கொடுத்து, சுவிசேஷம் அறிவித்தோம். யாவரும் அன்புடன் வாங்கினார்கள். அநேக வியாதியஸ்தர்களுக்காகவும் ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோ.மாற்கு மாரியப்பன், செல்வராயர்பால், மகாராஜன், அருண்ராஜ்.**

வளத்தோடு, ஆலஞ்சேரி, சடச்சவாக்கம் கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து கொண்டு வரும்போது, ஒருவர் எங்களிடம் என்ன கொடுக்கிறீர்கள் ? எதற்கு கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நாங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய புத்தகம் கொடுக்கிறோம் என்று சொன்னபோது, அவர் 2011ல் உலகம் அழியப் போகிறது, இந்த புத்தகத்தை கொடுப்பதற்கு பதிலாக பணத்தைக் கொடுக்கலாம், வீடு கட்டி கொடுக்கலாம் என்று சொன்னார். அதற்கு நாங்கள் முதலாவது இயேசு யார் என்பதை தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் என்று கூறினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோ.பிரேம் ஆனந்த், பால்ராஜ், சாலமோன், வின்சென்ட்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் ஒரு வாலிபன் எங்களை தகாத வார்த்தைகளைக் கொண்டு பேசினான். ஒரு பெரியவரிடம் இயேசுவைப் பற்றி சொல்லி சுவிசேஷப் புத்தகத்தைக் கொடுத்த போது, அவர் மனம்பொருமி தன்னோடிருந்த முதியவர்களைப் பார்த்து ‘நம்ம கடவுள் எல்லாம் செத்துப் போச்சு’ என்று சொல்லிவிட்டு, நாங்கள் தமிழ் கடவுள்களை வணங்குகிறவர்கள். கடவுள் ஒருவரே என்றார். அவரிடம் இயேசு என்ற கடவுள் மரித்தார், ஆனால் உயிரோடு எழுந்து இப்போது ஜீவிக்கிறார் என்றோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 875 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோ.நோவா, யோசுவா, ஜோசப் முரளிதரன், இஸ்தாக்கி.**

அருங்குன்றம் போகும் ரோட்டில் நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு சிலருக்கு சுவிசேஷத்தைக் கூறி கைப்பிரதிகளை கொடுத்தோம். ஒருவர் எங்களைப் பார்த்து உங்களுக்கு வேறு வேலை இல்லையா ? அமெரிக்கக்காரன் உங்களுக்குப் பணம் தந்து இதையெல்லாம் செய்ய சொல்றான். அவனோடு சேர்த்து உங்களையும் குண்டு போட்டு சுடணும், அப்பத்தான் நீங்க சரிப்படுவீங்க என்று சொன்னார். மொத்தம் 1010 சுவிசேஷப் புத்தகங்கள், 890 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோ. செல்வராஜ், பீட்டர், ஜெபமாலை, ஸ்டீபன்ராஜ், தாவீதுதங்கவேல்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் எங்களை அன்புடன் வரவேற்று, சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்டார்கள். சிலர் தங்களுடைய வாழ்வில் உள்ள குறைகள், பிரச்சனைகள் நீங்க ஜெபிக்கும் படி கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11: சகோ.எபிநேசர், சிவக்குமார், ஜோசப் தர்கீஸ், சாமுவேல் மாசிலாமணி.**

கிளக்காடி கிராமத்தைச் சுற்றியுள்ள 12 கிராமங்களில் யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். யாவரும் வாஞ்சையுடன் பெற்றுக் கொண்டார்கள். மிகுந்த சந்தோஷத்துடன் மீண்டும் எங்கள் கிராமத்திற்கு வாருங்கள் என்று சொன்னார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## 2010 மார்ச் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திண்டுக்கல்
யூனியன் : வடமதுரை
நாள் : 27.03.2010 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் மகேந்திரன்**
**நல்ல சமாரியன் சபை**
**சத்தியா நகர், பைபாஸ் ரோடு,**
**துணை மின்நிலையம் பின்புறம்**
**வடமதுரை – 624 802.**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**செல்: 9894988728**

## TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2010** ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறமத நண்பர்கள் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு 2010 மே 31 ம் தேதி சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு ( உங்கள் முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள்.

**வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

## தேர்வுக்காக ஜெபிக்க வேண்டுமா?

உங்கள் பெயர், வகுப்பு, தேர்வு கால அட்டவணையை உங்கள் முழுமுகவரியுடன் சேர்த்து எழுதி அனுப்புங்கள். தேர்வு நாட்களில் உங்களுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தர் ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

**ஜெயமோ கர்த்தரால் வரும்.**
நீதிமொழிகள் 21 : 31.

# TVGM பின்தொடர்பணி ஊழியங்கள்

கர்த்தருடைய கிருபையினால் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் 100– கிராம ஊழியத்தின்போது சந்திக்கும் புறமத நண்பர்களுக்கு TVGM தலைமை அலுவலகத்திலிருந்து தபால் மூலம் இலவசமாக வேதபாடம் அனுப்பப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், ஏதாவது ஒருவிதத்தில் TVGM ஊழியங்களைக் குறித்து கேள்விப்பட்டு, ஜெபத்திற்காக கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் புறமத நண்பர்களுக்கும் வேதவசனங்களோடு ஆறுதலான பதிலை எழுதுவதோடு அல்லாமல், தபால் மூலம் வேதபாடங்களையும் அனுப்பி வருகிறோம். இவ்வாறாக அனுப்பும் வேதபாடங்களை வாஞ்சையுடன் படித்து, அநேகர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சில சாட்சியை இங்கே பிரசுரிக்கிறோம். வாசித்து தேவனை மகிமைப்படுத்துங்கள். **பின்தொடர்பணி ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.**

**சகோதரி தமிழரசி, உத்தண்டியூர் :** என் வீட்டு வேலை பாதியில் நிற்கிறது. பணம் தேவை என்று இயேசப்பாவிடம் ஜெபம் செய்தேன். இந்த காரியம் கண்டிப்பாக நடக்காது என்று என் நண்பன் கூறினான். நான் என் இயேசப்பா கட்டாயம் எனக்கு செய்வார் என்று நம்பிக்கையோடு கூறினேன். இயேசு "மகளே, நான் உனக்கு இருக்கிறேன், உன் வீட்டு வேலையை நான் முடித்து தருகிறேன்" என்று என்னை தேற்றினார். நானும் நம்பிக்கையோடு இருந்தேன். ஆண்டவர் இயேசு அற்புதமாக என் பணத் தேவைகளை சந்தித்து, குறைவு பட்ட வீட்டு வேலையை முடிக்க உதவிச் செய்தார். இயேசுவுக்கு கோடாகோடி நன்றி செலுத்துகிறேன்.

**சகோதரி சசிகலா, பண்ருட்டி :** எனது தம்பி காணாமல் போனதற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். தங்களின் ஜெபத்தால் தம்பி கிடைத்து விட்டான். தேவனுக்கே மகிமை.

**சகோ. நடராஜன், திண்டுக்கல்** நான் இந்துக் குடும்பத்திலிருந்து இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு 10 ஆண்டுகளாக சபைக்கு சென்று வருகிறேன். எனக்கு தொண்டையில் சதை வளர்ந்து சுமார் 6 மாத காலமாக சாப்பிடுவதற்கு தொந்தரவாக இருந்து வருகிறது. இயேசுவின் கிருபையால் ஜீவனோடு இருக்கிறேன். 2010 பிப்ரவரி மாத **'தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்'** பத்திரிக்கையில் வெளிவந்த **'நோயிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஜெபம்'** எனக்கு அதிக நம்பிக்கையை கொடுத்திருக்கிறது. நான் தினமும் ஜெபித்து வருகிறேன்.

இதுபோன்று இயேசுவிடம் நன்மை பெற்ற புறமத நண்பர்கள் அநேகர். உங்கள் அருகிலுள்ள இயேசுவை அறியாத புறமத நண்பர்களுக்கு **'தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்'** பத்திரிக்கையை அறிமுகப்படுத்துங்கள்.

**தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன்**
**ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து,**
**திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.** யாக்.5:20.

**இயேசுகிறிஸ்துவே கர்த்தர்**

**துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!**

# ஜெபத்தைக் கேட்கிறவரே ! மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.

## ஜெபத்தைக் கேட்டு தேவன் செய்த அற்புதங்கள்!

**சகோதரி மெர்சிபாய், மார்த்தாண்டம்**

என் மகன் மதுபானம் மற்றும் புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தோம். நாங்களும் ஜெபித்து வந்தோம். தேவன் அதிலிருந்து மகனுக்கு விடுதலைக் கொடுத்தார்.

**சகோதரி ராஜகனி, நெல்லை.**

என் மகனுக்கும், மகளுக்கும் திருமணம் நடைபெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். 11.02.2010 அன்று மகனுக்கு திருமணம் நடைபெற கர்த்தர் உதவி செய்தார்.

**சகோதரி ரோஷினி, வேலூர்.**

எனக்கு திருமணமாகி 2 வருடங்களாக குழந்தையில்லாலிருந்தது. கடந்த 08.03.2009 அன்று கர்த்தர் அழகான பெண் குழந்தையை தந்தார்.

**சகோ. ஜெபமணிபால், பெரம்பலூர்.**

என் சகோதரியின் மகன் B.E. சிவில் பல்கலைக் கழகத் தேர்வில் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். கர்த்தர் எல்லா பாடங்களிலும் நல்ல மதிப்பெண்களோடு வெற்றி பெற செய்தார்.

**சகோ.அருள்தாஸ், இராம்நாடு,**

நான் சொந்தமாக சிறுதொழில் ஆரம்பிக்க போவதாகவும், பஞ்சாலை வேலை நிறுத்தப் போராட்டம் நிறுத்தப் பட்டு, பணி ஆரம்பிக்கவும் ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். நீங்கள் ஜெபித்து '**நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும்**' என்று பதில் எழுதியிருந்தீர்கள். இப்பொழுது என் தொழில் நல்லவிதமாக நடக்கிறது. பஞ்சாலை வேலை நிறுத்த போராட்டம் நிறுத்தப்பட்டு மீண்டும் பணியில் சேர கர்த்தர் கிருபை செய்தார்.

**சகோதரி ரத்தினம் பால்ராஜ், க.குமரி.**

TVGM ஊழியத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு ஜெபிக்க வந்த சகோதரி களிடம் என் மகளுக்கு குழந்தைபாக்கி யத்திற்காக ஜெபிக்க ஜெபவிண்ணப்பம் எழுதி கொடுத்திருந்தோம். நீங்களும் ஜெபித்து கர்த்தர் நிச்சயம் குழந்தைபாக்கி யத்தை தருவார் என்று பதில் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் அதின்படியே ஜெபத்தைக் கேட்டு அழகான பெண் குழந்தையைக் கொடுத்தார்.

**பிரியமானவர்களே!** *இயேசுகிறிஸ்து பட்சபாதமுள்ள தேவன் அல்ல. இவர்களுக்கு அற்புதம் செய்த இயேசு கட்டாயம் உங்கள் காரியங்களிலும் அற்புதம் செய்வார். எனவே கவலைப்படாதீர்கள். இன்றே உங்கள் ஜெபவிண்ணப்பங்களை எங்களுக்கு எழுதுங்கள். நீங்களும் எங்களோடு இணைந்து ஜெபியுங்கள். இயேசுகிறிஸ்து கட்டாயம் உங்கள் வாழ்விலும் அற்புதங்களைக் காணச் செய்வார். நீங்களும் தேவனுக்குச் சாட்களாயிருப்பீர்கள்.*

# கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் -
## எவ்விதமான எதிர்கால கிறிஸ்தவ தலைவர்கள் நமக்குத் தேவை?

### கிறிஸ்தவத்தை சமநிலை சூழ்நிலையில் பொருத்திக் காண்பிக்கும் திறமையுள்ள தலைவன்:

நமக்குத் தேவையான எதிர்கால தலைவர்கள், சமநிலை சூழ்நிலையில் பிறமதங்களின் கொள்கைகள் வெளிச்சத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கக் கூடிய திறமை உள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு நல்ல அறிவுள்ள தலைவனுக்குத் தான் எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்பதை ஒரு நேர்வழியில் காண்பிக்க திறமை இருக்கும். சுவிசேஷத்தை சமநிலை சூழ்நிலையில் பொருத்தி காண்பிக்கும்போது, ஒரு தலைவன் திரளான கூட்டத்தை கவரும்படியாக பிரயோஜனமாக இருக்கிறான், ஒரு சிறு கூட்டத்தைவிட. உதாரணமாக, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களில் இயேசு உவமைகள் மூலம் கிராம மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து ஊழியம் செய்தார்.

### ஒரு தலைவன் தேவ ஜனங்களைப் பற்றி ஒரு கரிசனை உடையவனாக இருக்க வேண்டும்.

ஒரு தலைவன் கரிசனை உள்ள நபராக இருக்க வேண்டும். ஒரு நபரின் கரிசனை தான் ஒரு மனிதனை ஏதாவது ஒரு வேலையை செய்ய தூண்டும். அதுபோல ஒரு கிறிஸ்தவ தலைவன், தேவபிள்ளைகள் கஷ்டப்படும்போது அல்லது துன்பப்படுத்தப்படும்போது கரிசனை உள்ளவனாக இருக்க வேண்டும். இன்றைக்கு கிறிஸ்தவ தலைவர்கள் மத்தியில் கரிசனை என்கிற உணர்வு மிகக் குறைவு. ஒரு தலைவன் இன்னொரு தலைவனுக்கு தேவை இருக்கும்போது அவன் மேல் கரிசனை காட்டுகிறவனாக இருப்பது மிக முக்கியம். உதாரணமாக, நெகேமியா எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதையும் கேட்டபோது உட்கார்ந்து அழுது, உபவாசித்து தேவனை நோக்கி மன்றாடினான் என்பதை **நெகேமியா 1:4 ல்** வாசிக்கிறோம். **'இந்த வார்த்தைகளை கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது சில நாளாய் துக்கித்து, உபவாசித்து மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தேன்'**. இது எருசலேமின் மதில்களை நெகேமியா திரும்பக் கட்டும்படி காண்பித்த கரிசனை வெற்றியாக முடிந்தது.

### ஒரு கிறிஸ்தவ தலைவன் கிறிஸ்துவின் சாட்சியாக எந்த நிலையிலும் நிற்க வேண்டும்.

ஒரு தலைவன் சாட்சி கொடுக்க மனதுள்ளவனாய் எந்த நிலையிலும் நிற்க வேண்டும். ஒரு மனிதன் நல்ல சாட்சியாக நிற்கும் போது, அவர்கள் சாட்சியையும், தியாகத்தையும் பார்த்து இன்னும் அதிகமான வல்லமையான தலைவர்கள் உருவாக ஏதுவாகும். நல்ல சாட்சியாக இருக்காவிட்டால்

தற்போதுள்ள தலைவர்களுக்கு இருக்கிற வாஞ்சையை குறைந்துபோகவும், அவர்களுக்கு மறுக்க முடியாத வெட்கத்தையும் உண்டாக்குகிறது. கிறிஸ்தவம் இவ்வளவு தூரம் வளர்ச்சி யடைவதற்கு காரணம், கிறிஸ்தவ தலைவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சியாக நின்று ஜனங்களுக்கு ஒரு முன்மாதிரியாக காணப்பட்டார்கள் என்பதால் தான். கிறிஸ்தவ சாட்சி என்பது, கிறிஸ்துவின் இரத்த சாட்சியாக மாறுவது. உதாரணமாக, பேதுரு இரத்த சாட்சியாக, தலைகீழாக சிலுவையில் அறைந்து கொள்ளப்பட்டார் என்று கிறிஸ்தவ வரலாற்றில் வாசிக்கிறோம்.

## ஒரு தலைவன் கிறிஸ்தவ விசுவாசத்தை எந்த நிலையிலும் அறிவிக்க வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவ தலைவனும் வாஞ்சையுள்ள ஒரு ஆத்துமாவுக்காக தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்த திறமை உள்ளவனாக இருக்க வேண்டும். அப்படி வெளிப்படுத்த திறமை இல்லாவிட்டால் தீவிர வாஞ்சையுள்ள ஆத்துமாவையும் இழக்க நேரிடும். கிறிஸ்தவ விசுவாசத்தை வெளிப்படுத்துவது என்பது கடினமான ஒரு காரியம். ஏனென்றால் அது ஒரு உலகப் பிரகாரமான திறமையை வளர்க்கச் செய்வதுபோல், இந்த திறமையையும் வளர செய்ய வேண்டும். இதற்கு மாறான கருத்து இல்லை. எவ்வளவு அதிகமாக நாம் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறோமோ அவ்வளவு அதிகம் தேவன் நம்மை அவருடைய மகிமைக்கு பயன்படுத்தலாம். வேதாகமத்தில் பவுல் அப்போஸ்தலன் என்ற ரீதியில் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தியதில் ஒரு மாதிரியாக காணப்படுகிறார்.

## ஒரு தலைவன் பொதுவாகவே செல்வாக்கு உள்ளவனாக இருத்தல் அவசியம்.

ஒரு மனிதன் மேற்குறிப்பிட்டுள்ள கிறிஸ்தவ தலைமைத்துவத்தின் நான்கு பகுதிகளிலும் திறமையுடையவனாக இருந்தால் மட்டுமே ஒரு பொது சமுதாயத்தில் பயனுள்ள செல்வாக்கு உடையவனாக இருக்க முடியும். மேலும் பொது சமுதாயத்தில் செல்வாக்கு உள்ள நபர் தான் அதிக மக்களை கவர முடியும். அநேக மக்கள் செல்வாக்கு உள்ள ஒரு மனிதன் பேசுவதைக் கேட்க வாஞ்சிப்பார்கள். ஏனென்றால் அவர்கள் சமுதாயத்தில் செய்கிற பயனுள்ள தொண்டுகள் மூலமாகவும், தங்களில் காணப்படும் குணாதியங்களினாலும் தங்கள் செல்வாக்கை வளர்த்து கொண்டிருக்கிறார்கள். நெகேமியாவைக் குறித்து நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அவர் ரா@ாவின் அரண்மனையில் சேவை கொண்டிரு;நதவர். அவர் அக்காலத்தில் பொதுவாழ்வில் செல்வாக்கு உள்ள மனிதனாக காணப்பட்டார். ஆகவே எருசலேமின் மதில்களை திரும்ப க்க கரிசனை உள்ளவனாக காணப்பட்டு எருசலேமுக்கு ராஜாவின் தயவோடும், அனுமதியோடும் போகிறார் ( நெகேமியா 2: 5 ) . இந்தச் செயல் அவன் தேவனை மகிழ்விக்கவும், அநேக ஜனங்களுக்கு நன்மை கிடைக்கவும் ஏதுவாயிற்று.

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2010 ஜனவரி மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010 ஜனவரி மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. முதல் வேலை நாளான ஜனவரி 2ம் தேதி உபவாச ஜெபநாளாக மாற்றி ஜெபத்துடன் ஊழியத்தைத் தொடங்கினோம்.

பலவிதமான போராடங்கள், தடைகள் வந்தாலும் ஊழியங்கள் தடையில்லாமல் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். திடீரென மிகுந்த பெலவீனத்தால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரிக்கு தேவன் அற்புத விடுதலை தந்தார்.

6 மாதங்களாக தடைப்பட்டு நின்ற சுவிசேஷ ஊழியத்தை இம்மாதம் மீண்டும் தொடர கர்த்தர் கிருபை செய்தார். ஜெப நேரங்களை அதிகப்படுத்தி ஊக்கமாக ஊழியத்திற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக இந்த ஆண்டை கர்த்தர் ஆசீர்வாதமான, சமாதானமான, ஜெயமான ஆண்டாக மாற்றி தருவார் என விசுவாசிக்கிறோம். தேவனுக்கே மகிமை!

5 / 3A கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
ஷோபனா இவான்சலின்.

செல்: 98658 26424 போன் : 04652 - 277251

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

உமது ஆலாசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக. சங். 20:4

### நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை

| | |
|---|---|
| **நாள் :** 28.02.2010 ஞாயிறு | **நாள் :** 01.03.2010 திங்கள் |
| **நேரம் :** 7PM முதல் 12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

**இடம்:** TVGM தலைமை அலுவலகம்,
100 – கிராமம்,
திருச்சி – 620 102.

புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டத்தில் பாஸ்டர் கைவல்யம் டேவிட்






## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.

**“நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது”. யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** TVGM தலைமை அலுவலகத்தில் சேவை செய்பவர்களுக்காகவும், 100–கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்களுக்காகவும், அறிமுகப் பணியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள். இதுவரை கர்த்தர் இவர்களுக்கு கொடுத்த சுகபெலனுக்காக தேவனைத் துதியுங்கள்.

**செவ்வாய்:** கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் ( TASOL Project ) க்கு 7 ஏக்கர் நிலம் வாங்க ரூ. 1,50,000/- முன் தொகையாக கொடுக்க உதவி செய்த தேவனைத் துதியுங்கள். இன்னும் ரூ.10000/– கொடுக்கக்கூடிய 135 பேரை கர்த்தர் கிருபையாக எழுப்பும்படியாக கருத்தாய் ஜெபியுங்கள்.

**புதன்:** சூறாவளிப்பட்டி மற்றும் பஞ்சப்பூரில் வாரந்தோறும் ஆராதனை நடத்த முன் வந்த **போதகர் தேவதாஸ்** குடும்பத்திற்காகவும், வாரந்தோறும் உணவு வழங்குவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ஒரு வாரத்திற்கு அல்லது மாதம் ஒரு முறை 200 பேருக்கு உணவு வழங்க ரூ. 3000/– தேவை. ஜெபியுங்கள்.

**வியாழன்:** ஆலயம் இல்லாத இடங்களிலும், ஆலயம் பாதி வரை கட்டி தொடர்ந்து கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஊழியர்களுக்கு ரூ. 1 லட்சம் கொடுக்கக் கூடியவர்களையும் கர்த்தர் எழுப்பும்படி ஜெபியுங்கள். முழு ஆலயமும் கட்ட ரூ.2 லட்சம் தேவை ( 30’ X 15’ வீதம் கட்டுவதற்கு ) 100 வீடுகள் உள்ள கிராமத்திற்கு 1 ஆலயம் எழும்ப ஜெபியுங்கள்.

**வெள்ளி:** 2010ம் ஆண்டில் 100–கிராம ஊழியத்திற்கு தேவையான 1 லட்சம் சுவிசேஷப் புத்தகங்கள் வாங்கப்படவும், மாதந்தோறும் 10,000 வீடுகளில் சுவிசேஷ ஒளியை ஏற்றுவிக்கவும் ஜெபியுங்கள்.

10,000 சுவிசேஷப் புத்தகங்கள் வாங்க ரூ.10,000 தேவை.

**சனி:** சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்காக, விசேஷமாக 10th,+2 படிக்கும் பிள்ளைகள் கருத்தாய் படித்து நல்ல மதிப் பெண்களோடு வெற்றி பெற ஜெபியுங்கள்.

மேலும் சமூக நல அலுவலகத்திலிருந்து சிறுவர் இல்லத்தை பார்வையிட வந்தவர்கள் சில குறைபாடுகளை சரிபடுத்த சொல்லியுள்ளார்கள். இல்லாவிட்டால் அரசாங்கத்தில் அனுமதி கிடையாது எனவும் கூறியுள்ளார்கள். எனவே கட்டிட பணிகளை 2010 மே மாதத்திற்குள்ளாக முடிக்க வேண்டியிருப்பதால் தேவைகள் சந்திக்கப்பட கருத்தாய் ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** 2010ம் ஆண்டில் பல கிளை அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படவும், மாதந்தோறும் தரிசன முகாம் நடத்தப்படவும், இதற்கு உதவியாக இசைக் குழு மற்றும் தேவையான பொருட்கள் வாங்கப்பட கருத்தாய் ஜெபியுங்கள்.

### உங்கள் பங்கை நிறைவேற்றுங்கள்!

TVGM ஊழியங்களுக்காக ஜெபிக்கிற உங்களுக்காக தேவாதி தேவனைத் துதிக்கிறோம். கர்த்தர் உள்ளத்தில் ஏவுகிறபடி இந்த ஊழியத்தில் உங்கள் பங்கை நிறைவேற்றுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM தலைமை அலுவலக முகவரி**

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


MR.STEPHEN CHRISTOPHER,
MANAGING DIRECTOR.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், '100 கிராம ஊழியம்' அறிக்கை, மாதாந்திர வாக்குத்தத்த செய்தி மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு )
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது )

MR. STEPHEN CHRISTOPHER,
SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

**Return Requested**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

# TVGM சிறுவர் இல்லம்

2010 ஜனவரி மாதத்தில் சிறப்பு உணவு வழங்கும்படி காணிக்கைகளை அனுப்பிய சகோதரி ஜாய் எலிசபெத் (கணவர் நினைவுநாள்), சகோதரி விக்டோரியா, சகோ. காபிரியேல், சகோதரி ஷாரோன் (மகன் 2ம் வருட நினைவு நாள்) மற்றும் இனிப்புகள் வழங்கிய சகோ. ஜனா, சகோதரி ராஜேஸ்வரி ஆகியோருக்கு நன்றி.



சகோ. ராஜேந்திரன் குடும்பத்தினர் சிறுவர் இல்ல பிள்ளைகளை நேரடியாக பார்வையிட்டு கரும்பு, இனிப்பு பொங்கல் வழங்கினார்கள்.



சகோதரி பாத்திமா குடும்பத்தினர் சிறுவர் இல்ல பிள்ளைகளை நேரடியாக பார்வையிட்டு சிறப்பு உணவு வழங்கினார்கள்.





சகோ.ஸ்டீபன் குமார் அவர்கள் குடும்பமாக 2010 புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு இனிப்புகள் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்தினார்கள். **தேவனுக்கே மகிமை!**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி